ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1929/45 - 2015 අගෝස්තු මස 28 වැනි සිකුරාදා - 2015.08.28

*1929/45 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி சபைகள் (நிலையான துணைவிதி) சட்டம்*

2014.10.01 ஆந் திகதிய 1882/22 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குயடியரசின் பகுதி IV (அ) - மாகாண சபைகள் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வீடு சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வதற்குரிய துணை விதியில் மற்றும் 2015.01.20 ஆந் திகதிய 1898/28 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வீடு சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடும் துணை விதி 2015.04.07 ஆந் திகதி நடாத்தப்பட்ட வடமேல் மாகாண சபைக் கூட்டத்தின் போது ஒரே குரலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உட்படுத்தப்பட்டு திருத்தம் செய்கின்றேன்.

சட்டத்தரணி ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர,
முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,
நீதியும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண நிர்வாகம்,
மனிதவளம், கல்வி மற்றும் கலாசார நடவடிக்கை, காணி, சூழல், சுற்றுலா,
முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும்
விநியோகமும் அமைச்சரும்,
வடமேல் மாகாணம்.

குருநாகல்,
2015, யூலை 20.

**2014.10.01 ஆந் திகதிய 1882/22 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குயடியரசின் பகுதி IV (அ) - மாகாண சபைகள் அதி விசேட வர்த்தமானியில் உள்ளடங்கியுள்ள வீடு சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வதற்குரிய துணைவிதி**

**2 ஆம் பிரிவை இரத்துச் செய்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு விதிக்கப்படுகின்றது.**

"2. வடமேல் மாகாணத்தின் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் வீடுகள் மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் (1960 Housing and Town Improvement Ordinance) கீழான ஒழுங்கினை செயற்படுத்தப்படுகின்ற பிரதேசத்தில் அமைந்துள்ள 0.2 பேர்ச்சஸ் (80 பேர்ச்சஸ்) அல்லது அதற்கு மேற்பட்ட காணி அல்லது காணிகளின் ஒரு பகுதியினை அபிவிருத்தி செய்தல் அல்லது துண்டிடப்பட்டு விற்பனை செய்தல் அல்லது மற்றவருக்கு உரிமை விடுவதற்காக சிறு துண்டுகளாக துண்டிடப்படும் எந்த சந்தர்ப்பத்திலும் அதற்குரிய நடவடிக்கைகளை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தலுக்கான சட்டதிட்டத்தினை அமைத்துக் கொடுப்பதற்காக இந்த துணைவிதி விதிக்கப்படுகின்றது".

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**3.1 ஆம் பிரிவினை இரத்துச் செய்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு விதிக்கப்படுகின்றது.**

3. எல்லா பிரதேச சபையிலும் காணி துண்டிடல் அல்லது அபிவிருத்தி செய்தல் பற்றி தீர்மானிப்பதற்காக "நிலையான மற்றும் வீடு சொத்து அபிவிருத்தி செய்யும் குழு" இனை ஆரம்பித்தல் வேண்டும். அக்குழு கீழ் காணப்படுபவர்களினால் அமைதல் வேண்டும்.

(i) உள்ளூராட்சி சபையின் தவிசாளர் (குழுவின் தவிசாளர்) ;
(ii) அந்த உள்ளூராட்சி சபையின் செயலாளர் (குழுவின் செயலாளர்) ;
(iii) உரிய அதிகாரப் பிரிவில் பொது சுகாதார பரிசோதகர் (குழு உறுப்பினர்) ;
(iv) உள்ளூராட்சி சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குழு உறுப்பினர்) ;
(v) வருமான பரிசோதகர் அல்லது பொது அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது வருமான மேம்பாட்டு உத்தியோகத்தர் அல்லது சூழல் உத்தியோகத்தர் என்பவர்களில் ஒருவர் (குழுவின் உறுப்பினர்).

3.1. அபிவிருத்தி நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற எல்லா விண்ணப்பப்படிவமும் இந்த துணைவிதியில் I ஆம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவமாக இருக்க வேண்டியதுடன் அதனை பிரதேச சபையில் 250.00 ரூபா தொகையினை செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும். உரிய விண்ணப்பப்படிவத்தினை "நபர் அல்லது நிறுவனம்"இனாலேயே இந்த துணைவிதியில் 03.2 உப பிரிவு மற்றும் 03.3 உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிடப்படுகின்ற தேவைகளை பூர்த்தி செய்து அதனை சமர்ப்பித்தல் வேண்டும்.

**3. ஆம் பிரிவினை இரத்துச் செய்து மற்றும் 2015.01.20 ஆந் திகதிய 1998/28 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் இந்த துணைவிதிக்கு உரியதாக செய்யப்பட்ட திருத்தம் உரித்தாக்கிக் கொண்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு விதிக்கப்படுகின்றது.**

3.2 ஏதாவதொரு பிரதேச சபை அதிகார பிரிவில் வீடு மற்றும் நகர நிர்மாண கட்டளைச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அதிகார பிரதேசங்களில் அமைந்துள்ள 0.2 ஹெக்டெயார் (80 பேர்ச்சஸ்) தொடக்கம் 04 ஹெக்டெயார் வரை அல்லது 04 ஹெக்டெயாரைவிட மேற்படும் வண்ணம் காணி அல்லது காணிகளின் ஒரு பகுதியினை நான்கு துண்டுகளுக்கு அல்லது அதற்கு மேலதிகமான அளவுகளுக்கு துண்டிடப்படுகின்ற எச்சந்தர்ப்பத்திலும் அவ்வாறு துண்டிடுவதற்கு முன் உரிய அபிவிருத்தி திட்டத்தினை மேற்கூறப்பட்ட 03 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான மற்றும் வீடு சொத்து அபிவிருத்தி செய்யும் குழுவிடத்தில் கீழ் காணப்படும் தேவைகளையும் பூர்த்தி செய்து அதனை சமர்ப்பித்து எழுத்து மூலம் உரிய அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

(அ) துண்டிடுவதற்கு எதிர்பார்த்துள்ள காணி 02 ஹெக்டெயார் (இரண்டிற்கு) அதிகமான தென்னங் காணியாயின் வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சிமன்ற ஆணையாளரிடத்தில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் அனுமதி ;

(ஆ) ஒரு ஹெக்டெயார் அல்லது அதற்கு மேற்பட்ட அளவிலான காணியினை துண்டிடும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு துண்டிடுவதனால் சூழலுக்கு எவ்வித இடையூறும் இல்லை என்று வடமேல் மாகாணத்தின் வடமேல் சூழல் அதிகார சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கை ;

(இ) துண்டிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள காணி "வயல் காணி" யாயின் அதற்காக கமநல சேவை ஆணையாளரின் அனுமதி ;

(ஈ) கடற் பிரதேசத்தில் அமைந்துள்ள காணியாயின் 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கடற்கரை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கடற்கரை பாதுகாப்பு திணைக்களத்தின் கடற்கரை பாதுகாப்பு பணிப்பாளரின் அனுமதி ;

(உ) துண்டிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள காணி பூரணமாக அல்லது அதில் ஒரு பகுதி அல்லது சில பகுதிகளை மேடாக்குவதற்கு தேவைப்படின் இலங்கை காணி மேடாக்கும் மற்றும் "அபிவிருத்தி"ப்படுத்தும் கூட்டுத்தாபனத்தின் சிபாரிசு ;

(ஊ) துண்டிடுவதற்கு எதிர்பார்த்துள்ள காணி குழாய் நீர் வசதியற்றதாயின் குடிநீர் பெற்றுக்கொள்ள முடியும் என்பதற்கு நீர்வழங்கல் சபையின் சிபாரிசு ;

(எ) துண்டிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள காணி பாதுகாப்பு அல்லது பொறுப்புத் திறனுடைய பிரதேசத்திற்கு அருகாமையில் அல்லது அதன் பாதுகாப்பிற்கு அதிகாரம் அளிக்கும்படி கூறும் சந்தர்ப்பத்தில் உரிய பாதுகாப்பு அல்லது பொறுப்புத் திறனுடைய பிரதேசமாக அறிவித்தலுக்குட்பட்ட அல்லது பொறுப்பாக உள்ள அரச அல்லது மாகாண சபை நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சிபாரிசு ;

(ஏ) அபிவிருத்தி திட்டத்தினுள் காணி துண்டிடுவதற்கு எண்ணியுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை, மிகச் சிறிய பகுதியின் அளவு, பெரிய பகுதியின் அளவு, துண்டிடும் திட்டத்தின் குறுக்குப் பாதைகளின் அகலம், வடிகாலமைப்பு, நீர் வழி, மலைக் குன்றுகள், கருங்கல், குழிகள் மற்றும் நீர் வழிந்தோடலினை வேறுபடுத்தும் போது அதனை வேறுபடுத்தும் முறை பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**4.1 ஆம் பிரிவு, 4.2 ஆம் பிரிவு மற்றும் 4.3 ஆம் பிரிவுகளை இரத்துச் செய்து கீழ்க் காணப்படும் பிரிவு விதிக்கப்படுகின்றது.**

3.3 துண்டிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள காணி 02 ஹெக்டெயாருக்கு அதிகமானதும், 10 ஹெக்டெயார் வரை, 10 ஹெக்டெயாரும் உட்படும் வண்ணமான காணியாகும் போது அதன் அபிவிருத்தி திட்டத்திற்கு அனுமதியினை பெற்றுக்கொள்வதற்காக உரிய உள்ளூராட்சி சபையிடத்தில் கோரிக்கை விடுப்பதற்கு முன் உரிய அபிவிருத்தி திட்டத்தினையும் மற்றும் மேற்கூறப்பட்ட 03.2 இன் உப பிரிவில் (அ) தொடக்கம் (எ) வரை குறிப்பிடப்பட்டுள்ள தேவையுடன் இங்கு 03.4 உப பிரிவின் கீழ் "மாகாண தொழிற்பாட்டுக் குழுவின்" எழுத்துமூல இணக்கத்தினை பெறல் வேண்டும்.

3.4 மாகாண தொழிற்பாட்டுக் குழுவில் உள்ளடங்கியவர்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறாகும்.

உள்ளூராட்சிமன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சின் செயலாளர் (வடமேல் மாகாணம்) - தலைவர்
வடமேல் உள்ளூராட்சி ஆணையாளர் - குழுவின் செயலாளர் பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) (வடமேல் மாாகாணம்) - உறுப்பினர்
வடமேல் மாகாண காணி ஆணையாளர் - உறுப்பினர்
வடமேல் மாகாண சூழல் அதிகார சபையின் பணிப்பாளர் - உறுப்பினர்
வடமேல் மாகாண வீட்டு நடவடிக்கை ஆணையாளர் - உறுப்பினர்

3.5. மேலே 03.4 உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவின் இணக்கத்தினை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை, நிகழ்ச்சித்திட்ட அறிக்கை மற்றும் உரிய எல்லா ஆவணங்களுடன் வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சிமன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சின் செயலாளரிடத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேற்கூறப்பட்ட 03.2 உப பிரிவின் கீழ் மற்றும் 03.3 உப பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துமூல அனுமதியுடன் உரிய பிரதேச சபையிடத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற காணியின் அபிவிருத்தி திட்டத்திற்கான அனுமதியினை பிரதேச சபை தவிசாளரிடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**5. 2 பிரிவு இரத்துச் செய்யப்படும்.**

**6 ஆம் பிரிவிற்கு பிறகு 6.1 பெயரில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு விதிக்கப்படுகின்றது.**

6.1 மேலே 6 ஆம் பிரிவின் கீழான சிறு பிரிவுகளாக பிரிப்பதற்கான அனுமதியினை பெற்றுக் கொடுப்பதற்கு முன் சபையிடத்தில் மீளளித்தல் வேண்டும்.

(அ) 09 (1) ஆம் பிரிவு மற்றும் 09 (2) ஆம் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது காணிப் பகுதிக்குரிய உரிமை

மற்றும்

(ஆ) துண்டிடப்பட்ட காணியில் உள்ள வடிகாலமைப்பு, பாதைகள், இடுகாட்டிற்காக ஒதுக்கப்பட்ட காணிகள் மற்றும் பொதுக் கிணறுகளின் உரிமை பிரதேச சபையிடத்தில் எவ்வித கட்டணமும் அறவிடாமல் முறையாக நொத்தாரிஸ் ஒருவரினால் எழுதி உறுதிப்படுத்தி, பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் பிரதேச சபைக்கு பொறுப்படைத்தல் வேண்டும் ;

(இ) இவ்வாறு பொறுப்படைக்கப்பட்ட பின்பு சிறு பிரிப்பிற்காக (துண்டு திட்டம்) "பிரதேச சபையின் தவிசாளரின்" அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

**9.5 ஆம் பிரிவினை இரத்துச் செய்து கீழ் காணப்படும் பிரிவு விதிக்கப்படுகின்றது.**

9.5 துண்டிடப்படுகின்ற காணியில் உள்ள எல்லா காணி துண்டுகளுக்கும் மென் மின் கம்பிகளை பொருத்தி மின்சார வசதியினை பெற்றுக்கொள்வதற்கு இயன்ற வகையில் துண்டிடப்படுகின்ற காணியில் உள்ள எல்லா வழிகளிலும் மின் கம்பிகளை பொருத்தி மின்சார வசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**13.1 ஆம் பிரிவு மற்றும் 13.2 ஆம் பிரிவுகளை இரத்துச் செய்து கீழ் காணப்படும் பிரிவு விதிக்கப்படுகின்றது.**

13.1 இந்த துணைவிதியில் 03.2 உப பிரிவு மற்றும் 03.3 உப பிரிவுகளின் கீழ் உரிய எழுத்து மூலம் அனுமதியினை மற்றும் உரிய அறிக்கையுடன் அபிவிருத்தி திட்டம் பிரதேச சபைக்கு கிடைத்து ஒரு மாதத்தினுள் உரிய அபிவிருத்தி திட்டம் பிரதேச சபையின் தவிசாளரினால் அனுமதித்தல் அல்லது அனுமதிக்காது இருத்தல் வேண்டும். அது போன்று 06 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உப துண்டிடல் (துண்டு வரைபு) பிரதேச சபைக்கு கிடைத்து 4 வாரங்களுள் அதற்கான அனுமதியினை பிரதேச சபையின் தவிசாளரினால் பெற்றுக்கொடுத்தல் அல்லது பெற்றுக் கொடுக்காதிருத்தல் வேண்டும்.

13.2 மேற்கூறப்பட்ட 13.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதியினை பெற்றுக்கொடுப்பதனை நிராகரிப்பதாயின், அவ்வாறு அனுமதியினை வழங்குவதனை நிராகரிப்பதற்கான காரணங்களை விண்ணப்பதாரியிற்கு மேற்கூறப்பட்ட 13.1 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்ட காலத்தினுள் எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

**14.1 ஆம் பிரிவினை இரத்துச் செய்து கீழ் காணப்படும் பிரிவு விதிக்கப்படுகின்றது.**

*14.1 வடமேல் மாகாணத்தில் நிர்வாக அதிகாரப் பிரிவினுள் வீடு சொத்து அபிவிருத்தியும் காணி துண்டிட்டு விற்பனை செய்கின்ற ''நபர் அல்லது, நிறுவனம்''இனால் அதற்காக வடமேல் மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் பதிவு செய்தல் வேண்டும். பதிவிற்காக கீழ்க் காணப்படும் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.*

| | |
|---|---|
| I. ஆரம்ப பதிவு | 500,000.00 ரூபா |
| II. வருடாந்த பதிவினை புதுப்பித்தல் | 100,000.00 ரூபா |

**16 ஆம் பிரிவினை இரத்துச் செய்து கீழ்க் காணப்படும் பிரிவு விதிக்கப்படுகின்றது.**

*16.1 மேற்கூறப்பட்ட 14.1 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்வதற்கான சான்றிதழ் ஒன்றினை பெற்றுக்கொள்ளும் ''நபர் அல்லது, நிறுவனம்'' அந்த சான்றிதழினை உபயோகித்து இந்த துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்காக உபயோகிப்பதற்கு வேறு எவருக்கும் சந்தர்ப்பம் வழங்குவது சட்டரீதியானதல்ல.*

*16.2 ஏதாவதொரு காரணத்திற்காக இந்த துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பந்திகளில் விபரிக்கப்படுகின்ற தேவைகளில் ஏதாவதொரு தேவைகளை வழங்காத போதும், இந்த துணைவிதியில் விபரிக்கப்பட்டுள்ள செயல்முறையில் அல்லது அலுவலக செயல்முறைகளின் அப்பால் பெற்றுக்கொள்ளப்படும் அல்லது வழங்கப்படுகின்ற ஏதாவதொரு உரிமப் பத்திரம் அதிகாரம் அற்றதாகவும் செல்லுபடியற்றதாகவும் காணப்படும்.*

*16.3 இந்த துணைவிதியினை ''நபர் அல்லது நிறுவனம்'' மீறுகின்ற போது அல்லது மீறினால் அது பற்றி பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அவரின் அதிகாரம் உள்ள பிரதிநிதியினால் அல்லது வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரினால் அல்லது அவரது அதிகாரம் உள்ள பிரதிநிதியினால் செய்யப்படுகின்ற பரிசீலனையின் போது உறுதிப்படுத்தப்படும் போது உரிய காணி அல்லது காணியின் ஒரு பகுதி அபிவிருத்தி செய்தல் அல்லது துண்டிட்டு விற்பனை செய்தல் அல்லது மற்றவருக்கு உரித்தாக்குதலுக்காக சிறு துண்டுகளாக்கும் செயலினை உடனடியாக நடைமுறைப்படுத்தும் வண்ணம் உரிய பிரதேச சபையின் தவிசாளரினால் அல்லது வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரினால் தடை செய்தல் அல்லது நிறுத்துதல் சட்டரீதியானதாகும். அவ்வாறு தடை செய்யப்படுகின்ற எல்லா சந்தர்ப்பத்திலும் தடை செய்த அதிகாரியினால் உரிய காணி ரெஜிஸ்தாரிடத்தில் அறிவித்து அதற்குரிய ஆவணத்தினையும் வேறு ஆவணங்களையும் இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து உரிய ''நபர் அல்லது நிறுவனம்'' வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரினால் பேணக்கூடிய அழிவற்ற அட்டவணையிற்கு உட்படுத்தல் வேண்டும்.*

**17 ஆம் பிரிவிற்கு கீழ்க் காணப்படும் பகுதி உட்படுத்தப்படும்.**

*''நபர் அல்லது நிறுவனம்'' என்பது, காணி துண்டிட்டு விற்பனை செய்யும் எண்ணத்தில் செயற்படுகின்ற எந்த ஒரு நபரும், எந்த ஒரு நிறுவனமும், எந்த ஏலவிற்பனையாளரும், எந்த ஒரு தரகருக்கு அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர், எந்த ஒரு வியாபாரியும், வியாபார நிறுவனம், ஏதாவதொரு சிறு துண்டிடுபவர், எந்தவொரு அபிவிருத்தியாளர் என்று கருதப்படும்.*

**கீழ்க் காணப்படும் பிரிவு புதிதாக உட்படுத்தப்படுகின்றது.**

*18. இக்கொள்கைப் பிரகடனத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை தோன்றுமாயின், சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2015.01.20 ஆந் திகதிய 1898/28 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குயடியரசின் IV (அ) – மாகாண சபைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வீடு சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிக்கப்பட்டு விற்பனை செய்வதற்குரிய துணைவிதியில்,*

*3.2 (அ) பிரிவு இரத்துச் செய்யப்படுகின்றது.*
*4 (1) ஆம் பிரிவு இரத்துச் செய்யப்படுகின்றது.*
*4 (2) ஆம் பிரிவு இரத்துச் செய்யப்படுகின்றது.*

*9-285*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.